# புதுச்சேரி அரசு
# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

(அரசாணை (பலவகை) எண். 13 /2025 தேதி 29.05.2025)

## முதனிலை அறிவிக்கை

*(2013-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டத்தின் 11 பிரிவை சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ்)*

புதுச்சேரி மாவட்டம், உழவர்கரை வட்டம், 38 - சாரம் வருவாய் கிராமத்தில், 00.05.80 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலம், "புதுச்சேரி, லாஸ்பேட்டையில் 110/22 கி.வா. வாயு காப்பிடப்பட்ட துணை மின் நிலையம் அமைப்பது" என்ற பொது நோக்கத்திற்காக, தேவைப்படுகிறது என புதுச்சேரி அரசு கருதுகிறது. அதற்காக, சமுதாய தாக்கக் கணிப்பு அமைப்பால் (SIA Unit) சமுதாய தாக்க மதிப்பீட்டு ஆய்வு செய்யப்பட்டது. இச்சட்டத்தின் 4-ஆம் பிரிவின் கீழ் உரைக்கப்பட்டவாறு சிறப்பு செயலர் (வருவாய்) அவர்களால் அமைக்கப்பட்ட ஒரு குழுவால் முதனிலை ஆய்வு செய்யப்பட்டது / அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்த சமுதாய தாக்க கணிப்பு அறிக்கையானது ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்திற்காக சார்பு/துணை ஆட்சியர் (வருவாய்) வடக்கு, புதுச்சேரி அவர்கள் நிர்வாகியாக பணியமர்த்தப்பட்டுள்ளார். ஆதலால், புதுச்சேரி மாவட்டத்தின், 38 - சாரம் வருவாய் கிராமத்தில், 00.05.80 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தினை மேற்குறிப்பிட்ட நோக்கத்துக்காக கையகப்படுத்தலின் கீழ் இருக்கிறது. அதன் விளக்கமான விவரிப்பு அடியில் வருமாறு:-

### அட்டவணை

**I நிலங்கள்**

வட்டம் : உழவர்கரை — **வருவாய் கிராமம் : 38 - சாரம்**

| வ எண் | மறு அளவை எண் | நிலத்தின் உரிமை வகை | நிலத்தின் வகை | நில உரிமையாளர்கள் / அக்கறையுள்ள நபர்களின் பெயர் | கையப்படுத் -தப்படும் நிலத்தின் பரப்பளவு (H.A.Ca) | தெற்கு | மேற்கு | கிழக்கு | வடக்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | 217/3pt | பட்டா | தரிசு நிலம் | தற்கால தர்மகர்த்தா ஸ்ரீ திரௌபதியம்மன் கோவில் தேவஸ்தானம், லாஸ்பேட், புதுச்சேரி | 00.05.80 | 184 218/1 | 184 | 217/4 | 217/3pt |
| | | | | **மொத்தம்** | 00.05.80 | | | | |

**II - மரங்கள் / கட்டமைப்புகள்**

கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் மீது மரங்கள் மற்றும் கட்டமைப்புகள் ஏதும் இல்லை.

3. (i) இந்த அறிவிக்கையானது, 2013-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டத்தின் (சட்டம் எண்:30/2013) 11-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவு வகைமுறைகளின் கீழ் தொடர்புடைய அனைவருக்காகவும் வெளியிடப்படுகிறது.

(ii) நிலத்தின் திட்ட வரைபடமானது சார்பு/துணை ஆட்சியர் (வருவாய்) வடக்கு மற்றும் நில ஆர்ஜித அதிகாரி, புதுச்சேரி அவர்களின் அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. அதை எந்தவொரு வேலை நாளிலும் வேலை நேரத்தின் போது பார்வையிடலாம்.

(iii) நிலத்தினுள் நுழைவதற்கு, நில அளவை செய்வதற்கு, நிலம் எதனையும் சமநிலைப்படுத்துவதற்கு, நிலத்தடி மண்ணை அகழ்ந்தெடுப்பதற்கு அல்லது துளை இடுவதற்கு மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் 12-ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அவர்களுடைய பணியை உரியவாறு மேற்கொள்வதற்குத் தேவையான பிற அனைத்து செயல்பாடுகளை செய்வதற்கு சார்பு/துணை ஆட்சியர் (வருவாய்) வடக்கு மற்றும் நில ஆர்ஜித அதிகாரி, புதுச்சேரி மற்றும் அவரது அலுவலக பணியாளர்களுக்கு இந்த அரசால் அதிகாரமளிக்கப்படுகிறது.

..2/-

web Editor



(iv) சட்டத்தின் 11-ஆம் பிரிவின் (4)-ஆம் உட்பிரிவின் கீழ் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து சார்பு/துணை ஆட்சியர் (வருவாய்) வடக்கு மற்றும் நில ஆர்ஜித அதிகாரி, புதுச்சேரி அவர்களின் முன் ஒப்புதலின்றி நிலத்தின் வணிக நடவடிக்கை எதையும் செய்ய அல்லது வணிக நடவடிக்கை நிகழ்வதற்கு காரணமாக இருக்கக்கூடாது. அதாவது அந்த நிலத்தை விற்பனை செய்தல், விலைக்கு வாங்குதல் அந்த நிலத்தின் மீது வில்லங்கம் எதையும் உருவாக்குதல் கூடாது.

இந்த நில கையகப்படுத்துதலுக்கு மறுப்புகள் ஏதேனும் இருப்பின் அந்த மறுப்புகளானவை அக்கரையுள்ள நபரால் இச்சட்டத்தின் 15-ஆம் பிரிவின் கீழ் வகைசெய்யப்பட்டவாறு, இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 (அறுபது) நாட்களுக்குள் சார்பு/துணை ஆட்சியர் (வருவாய்) வடக்கு மற்றும் நில ஆர்ஜித அதிகாரி, புதுச்சேரி அவர்களின் முன்பு தாக்கல் செய்யலாம்.

/துணைநிலை-ஆளுநரின் ஆணைப்படி/

(signature) 29/5

(குலோத்துங்கன். அ, இ.ஆ.ப.,)

5/7 அரசு சிறப்பு செயலர் (வருவாய்)